### IV.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* THE HOURS OF SITTING.

Mr. SPEAKER : According to the agreement arrived at to-day, we shall have general discussion on the Supplementary Statement of Expenditure for 1958–59 and Statement of Demands for Grants for Excess Expenditure in 1955–56, till 1-30 p.m. to-day, that is, one hour for discussion on the Supplementary Statement of Expenditure and 15 minutes for the discussion on the Demands for Grants for Excess Expenditure. The House will meet again at 3 p.m. to-day, when we shall take up the urgent Government Bill, viz., The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill. After that we shall have general discussion on the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958, till 5 p.m. to-day. I think the House is agreeable to it.

### V.—GENERAL DISCUSSION ON FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1958–59 AND STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1955–56.

Mr. SPEAKER : Now, the hon. Member Sri A. R. Marimuthu will speak. Before he speaks, I would like to know how long the Hon. Minister will take for his reply.

The Hon. Sri C. SUBRAMANIAM : Ten minutes, Sir.

* Sri A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் உப மான்ய கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நம் ராஜ்யத்தில் செட்டில்மெண்ட் நடத்துவதற்காக இதில் உபரித்தொகை கேட்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஜமீன் இனாம் கிராமங்களில் செட்டில்மெண்ட் வேலைகள் இன்னும் சரியான விதத்தில் நடத்தப்படுவதாக தெரியவில்லை. ஆகவே அதை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் சில கிராமங்களில் இன்னும் செட்டில்மெண்ட் செய்யப்படாமல் இருப்பதால் அங்குள்ள மக்கள் கூடுதல் வரி கொடுக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே எவ்வளவு சீக்கிரமாக செட்டில்மெண்ட் வேலைகள் செய்யமுடியுமோ அவ்வளவு வேகமாக இந்த வேலைகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் புதிதாக செட்டில்மெண்ட் செய்யப்படும்பொழுது புதிதாக நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட இடங்களை எல்லாம், அதாவது நஞ்சை கிராமங்களை எல்லாம் புஞ்சை பிரதேசமாக கிளாஸிபிக்கேஷன் செய்து செட்டில்மெண்ட் செய்யப்படுகிறது. இது சரியல்ல என்பதுதான் என் எண்ணம். மானாவாரி புஞ்சை என்று செட்டில்மெண்ட் செய்து கொண்டு போனால் விவசாயிக்கு தண்ணீர் தீர்வை வரி அதிகமாக செலுத்தவேண்டியிருக்கும். அதோடு இனிமேல் வரப்போகும் விவசாய வருமானவரி சட்டத்தின்படி யார் அதிகமாக நிலவரி செலுத்துகிறார்களோ அவர்கள்தான் வரி செலுத்தவேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை வரப்போகிறது. ஆகவே அவர்கள் தலையில் வரிபாரத்தை மேலும் போடவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு அந்தந்த கிராமங்களில் எந்த நிலைமையில் விவசாயம் இருக்கிறது என்பதை பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் கிளாஸிபிக்கேஷன் செய்து செட்டில்மெண்ட் நடத்தவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இப்போது இர்ரிகேஷன் சம்பந்தமாக உபரித்தொகை கேட்கப்பட்டிருக்கிறது. ஸி.எம்.பி. (காவேரி-மேட்டூர் பிராஜக்ட்) பகுதிகளில் தண்ணீர் போதவில்லை என்கிற குறை எப்போதும்